பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
20 01 2026 TUESDAY 12 40 PM
ஆகாஷவாணி - செய்திகள்

**தலைப்புச் செய்திகள்**

1. பிஜேபி தலைவராக திரு. நிதின் நபின் இன்று பதவியேற்றுக் கொண்டார்.
**அவருக்கு பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

2. வேகமாக வளர்ந்து வரும் பொருளாதார நாடாக இந்தியா உருவெடுத்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி தெரிவித்துள்ளார்.

3. தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடர் இன்று தொடங்கியது.
மாநில ஆளுநர், உரையை வாசிக்காமல் புறப்பட்டார்.

4. ஈரானில் அரசுக்கு எதிரான போராட்டத்தில், உயிரிழந்தோர் எண்ணிக்கை 4 ஆயிரத்து 29ஆக அதிகரித்துள்ளது.

5. பேட்மிண்டன் போட்டிகளில் பங்கேற்பதிலிருந்து ஓய்வு பெறுவதாக இந்தியாவின் Saina Nehwal அறிவித்துள்ளார்.

>>>>><<<<<

பிஜேபி தலைவராக திரு. நிதின் நபின் இன்று பதவியேற்றுக் கொண்டார்.

புதுதில்லியில் பிஜேபி தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பிரதமர் திரு. நரேந்திர மோடி முன்னிலையில், திரு. நிதின் நபின் பிஜேபி தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அவருக்கு பிரதமர் வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

அப்போது பேசிய பிரதமர், பிஜேபி மக்கள் நலனை இலக்காக கொண்டு செயல்பட்டு வருவதாக தெரிவித்தார்.

*ஜனநாயக மாண்புகளின் அடிப்படையில் இந்த தேர்வு நடைபெற்றதாகவும், கட்சித் தொண்டர்கள் ஒருமனதாக திரு. நிதின் நபினை தலைவராக தேர்ந்தெடுத்துள்ளதாகவும் திரு. நரேந்திர மோடி கூறினார்.*

*உலகின் மிகப் பெரிய கட்சியான பிஜேபியின் 12வது தேசியத் தலைவராக பொறுப்பேற்றுள்ள திரு. நிதின் நபினுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதாக அக்கட்சியின் மூத்த தலைவர் திரு ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.*

*இளம் வயதில் இப்பொறுப்பை திரு. நிதின் நபின் ஏற்றுள்ளதாகவும், இதற்கு முன்பாக, பீகாரில் சட்டப்பேரவை உறுப்பினர் மற்றும் அமைச்சர் உள்ளிட்ட பதவிகளில் அவர் திறம்பட செயலாற்றியவர் என்றும் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.*

*மத்திய அமைச்சர்கள் திரு. அமித் ஷா, திரு. ராஜ்நாத் சிங், திரு. நிதின் கட்கரி உள்ளிட்ட தலைவர்களும் அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.*

*>>>>><<<<<*

*வேகமாக வளர்ந்து வரும் பொருளாதார நாடாக இந்தியா உருவெடுத்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி தெரிவித்துள்ளார்.*

*இதுகுறித்து, சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், நடப்பாண்டில், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 7 புள்ளி 3 சதவீதமாக இருக்கும் என்ற சர்வதேச செலாவணி நிதியத்தின் அறிக்கை, நாட்டின் பொருளாதார வளர்ச்சியை பிரதிபலிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.*

*சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தம், புதிய தொழிலாளர் நலச் சட்டங்கள், மேம்படுத்தப்பட்ட உள்கட்டமைப்பு வசதிகள் போன்றவை நாட்டின் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தியதாகவும் திரு. கிஷன் ரெட்டி தெரிவித்துள்ளார்.*

*>>>>><<<<<*

*ஜவுளித் துறையில் கடந்த பத்தாண்டுகளில் அதிக வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் தெரிவித்துள்ளார்.*

*இதுகுறித்து சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளே இதற்கு காரணம் என்று குறிப்பிட்டுள்ளார்.*

*ஜவுளித் துறையில் ஏற்றுமதி மற்றும் சர்வதேச சந்தை வாய்ப்புகள் அதிகரித்துள்ளதாகவும், கைத்தறி பொருட்களுக்கான புதிய வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.*

*இத்துறையில், மகளிரின் பங்களிப்புடன் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை அடைவது சாத்தியம் என்றும் திரு. கிரிராஜ் சிங் கூறியுள்ளார்.*

*>>>>><<<<<*

*நாட்டின் உயிரி எரிசக்தி திறன் தற்போது 11 ஆயிரத்து 614 மெகாவாட்டாக உயர்ந்துள்ளதாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை தெரிவித்துள்ளது.*

*இதுகுறித்து அத்துறையில் சமூகவலைதளத்தில் வெளியிடப்பட்டுள்ள பதிவில், மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, தொடர் வளர்ச்சி சாத்தியமானதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*>>>>><<<<<*

*எரிசக்தி துறையில் நாட்டின் முன்னணி மாநிலமாக மஹாராஷ்ட்ரா உருவெடுத்துள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் தெரிவித்துள்ளார்.*

*இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், டாவோஸில் நடைபெற்று வரும் உலக பொருளாதார மன்றக் கூட்டத்தில் 14 புள்ளி 5 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளதாகவும், 15 லட்சம் வேலைவாய்ப்புகளை இது உருவாக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.*

தகவல் தொழில்நுட்பம், பசுமை எரிசக்தி போன்ற துறைகளில் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளதாகவும் திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடர் இன்று தொடங்கியது.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் பேரவை தொடங்கிய நிலையில், நாட்டுப்பண் இசைக்கப்பட வேண்டும் என்று ஆளுநர் வலியுறுத்தியது ஏற்கப்படாததால், ஆளுநர் திரு. ஆர்.என். ரவி உரையை வாசிக்காமல் பேரவையிலிருந்து புறப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து, பேரவைத் தலைவர் திரு. அப்பாவு, ஆளுநர் உரையின் தமிழாக்கத்தை வாசித்தார்.

அப்போது, மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுவிட்டதாக கூறி, அஇஅதிமுக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர். அப்போது பிஜேபி உறுப்பினர்களும், டாக்டர் அன்புமணி ஆதரவு பாமக உறுப்பினர்களும் பேரவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

இதற்கிடையே, பேரவையில் தாம் பேச முற்பட்டபோது, ஒலிவாங்கி பல முறை அணைக்கப்பட்டதாக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி குற்றம் சாட்டியுள்ளார்.

நாட்டுப்பண் இசைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியதை ஏற்காததால், உரையை வாசிக்காமல் பேரவையிலிருந்து வெளியேறியதாக அவர் கூறியுள்ளார்.

இதுகுறித்து மக்கள் மாளிகை வெளியிட்டுள்ள 5 பக்க செய்திக்குறிப்பில், 13 காரணங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

மாநிலத்தில் போதைப்பொருள் புழக்கம் மற்றும் மகளிருக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துள்ளதாகவும், சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

*மேலும், சாதனை என்ற பெயரில் தவறான தகவல்கள் மாநில அரசு தயாரித்த ஆளுநர் உரையில் இடம்பெற்றதாகவும், இந்த அரசின் மீது மக்கள் அதிருப்தியில் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.*

*முக்கியமான மக்கள் பிரச்சினைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் ஆளுநர் திரு. ஆர். என். ரவி அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.*

*கடந்த 2023ஆம் ஆண்டு முதல், ஆளுநர் உரை நிகழ்த்தாமல் புறக்கணித்ததற்கு, நாட்டுப்பண் இசைக்கப்படாதது முக்கிய காரணமாக கூறப்படுகிறது.*

*இதற்கிடையே, இன்று தொடங்கிய தமிழக சட்டப்பேரவை கூட்டத் தொடர், வரும் 24ஆம் தேதிவரை நடைபெறும் என்று பேரவைத் தலைவர் திரு. அப்பாவு அறிவித்துள்ளார்.*

*>>>>><<<<<*

*கேரள மாநில சட்டப்பேரவை பட்ஜெட் கூட்டத் தொடர் இன்று தொடங்கியது.*

*இக்கூட்டத் தொடரில் அரசின் கொள்கையை வாசித்த ஆளுநர் திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேக்கர், கேரள அரசு நிதி பற்றாக்குறையில் இருப்பதாக தெரிவித்தார்.*

*மாநில அரசின் வரிக் கொள்கையின் மூலம், கேரளாவிற்கு 4 ஆயிரத்து 250 கோடி ரூபாய் வரி இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேக்கர் அந்த உரையில் கூறினார்.*

*>>>>><<<<<*

*சபரிமலை ஐயப்பன் கோவில் தங்கத்தகடு முறைகேடு தொடர்பாக, அமலாக்கத்துறை, தமிழகம், கேரளா, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களில் சோதனை நடத்தியது.*

*கேரள குற்றப்பிரிவு காவல்துறை, முதல் தகவல் அறிக்கையை தாக்கல் செய்ததை அடுத்து, திருவிதாங்கூர் தேவசம் போர்டு அலுவலர்கள் உள்ளிட்டோர் மீது வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகிறது.*

*கடந்த 2019ஆம் ஆண்டு முதல் 2025ஆம் ஆண்டு வரை சபரிமலை ஐயப்பன் கோவில் தங்கத்தகடு மாற்றுவதில் இந்த மோசடி நடைபெற்றதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.*

*>>>>><<<<<*

*வெளிநாடுகளில் வாழும் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர்கள், சிறந்த தொழில்முனைவோர்களாக திகழ வேண்டும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு கேட்டுக் கொண்டுள்ளார்.*

*சுவிட்சர்லாந்தின் Zurich-ல் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், வெளிநாடுகளில் வசிக்கும் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர்களின் நலனுக்காக 50 கோடி ரூபாய் நிதியுடன் கூடிய திட்டத்தை தமது அரசு செயல்படுத்தி வருவதாக தெரிவித்தார்.*

*நாட்டின் 25 சதவீத முதலீடுகளை ஆந்திரா தற்போது ஈர்த்து வருவதாக அவர் கூறினார்.*

*22 லட்சம் கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்த்து, 20 லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கான திட்டம் செயல்படுத்தப்படவுள்ளதாகவும் திரு. சந்திரபாபு நாயுடு தெரிவித்தார்.*

*>>>>><<<<<*

*ஈரானில் அரசுக்கு எதிரான போராட்டத்தில், உயிரிழந்தோர் எண்ணிக்கை 4 ஆயிரத்து 29ஆக அதிகரித்துள்ளதாக மனித உரிமை ஆர்வலர்களின் செய்தி நிறுவனம் கூறியுள்ளது.*

*இந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட 26 ஆயிரத்திற்கும் மேற்பட்டோரை அந்நாட்டு அரசு கைது செய்துள்ளதாகவும், அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.*

*இதனையடுத்து, சுவிட்சர்லாந்து - டாவோஸில் நடைபெற்ற உலக பொருளாதார மன்ற கூட்டத்தில் உரையாடுவதற்கு ஈரான் வெளியுறவு அமைச்சர் திரு. அப்பாசுக்கு விடுக்கப்பட்டிருந்த அழைப்பு திரும்ப பெறப்பட்டுள்ளதாக அந்த அமைப்பு கூறியுள்ளது.*

*>>>>><<<<<*

*பேட்மிண்டன் போட்டிகளில் பங்கேற்பதிலிருந்து ஓய்வு பெறுவதாக இந்தியாவின் Saina Nehwal அறிவித்துள்ளார்.*

*காயம் காரணமாக போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அவர் தெரிவித்துள்ளார்.*

*2012 லண்டன் ஒலிம்பிக் போட்டியில் அவர் வெண்கலப்பதக்கம் வென்றார்.*

*ஆசிய விளையாட்டுப் போட்டி, காமன்வெல்த் விளையாட்டு போட்டிகளிலும் Saina Nehwal பதக்கம் வென்றுள்ளார்.*

*>>>>><<<<<*

*இந்தோனேஷியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்கியது.*

*>>>>><<<<<*

*மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில், தில்லி அணி இன்று மும்பை அணியை எதிர்கொள்கிறது.*

*இப்போட்டி, வதோதராவில் இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.*

*>>>>><<<<<*

*கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுப் போட்டி, லே-யில் இன்று தொடங்கியது.*

*லடாக் துணை நிலை ஆளுநர் Kavinder Gupta போட்டிகளை தொடங்கி வைத்தார்.*

*நாடுமுழுவதிலுமிருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீரர்கள் இதில் பங்கேற்கின்றனர்.*

*>>>>><<<<<*